செ.வெ.எண்.54/ஜூலை                                                                தேதி : 29.07.2016

**பத்திரிக்கைச் செய்தி**

## விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 5 பயனாளிகளுக்கு மண்வள அட்டையை தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.





விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் தருமபுரி மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (29.07.2016) மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கடந்த 24.06.2016 அன்று நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளிடத்தில் தெரிவிக்கப்பட்டது. இன்றைய தினம் நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் குறித்து மனுக்கள் பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும் புதிய தொழில் நுட்பத்தின் மூலம் பயிரிடும் நுணுக்கங்களை விவசாய பெருமக்கள் அறிந்து கொண்டு அதன் மூலம் விவசாயம் செய்து உற்பத்தியை பெருக்கி அதிக இலாபம் பெற வேண்டும். மண்வள அட்டை இயக்கம் 2016-17 திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் 17,392 மண் மாதிரிகள் சேகரிப்பு பணி ஏப்ரல், மே மாதங்களில் முடிக்கப்பட்டு தற்போது ஆய்வு பணி நடைபெற்று வருகிறது. ஆய்வு முடிந்தவுடன் ஆய்வு முடிவுகள் மற்றும் அதற்கேற்ற சாகுபடி பயிருக்கான உரப்பரிந்துரை அடங்கிய மண் வள அட்டைகள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக 5 விவசாயிகளுக்கு மண்வள அட்டையை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், சிப்காட் வருவாய் அலுவலர் திரு. பஷீர், வேளாண்மை இணை இயக்குநர் திரு. ராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், உதவி இயக்குநர் (பஞ்சாயத்து) திருமதி. ஆர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி. சுசீலா, கூட்டுறவு இணைபதிவாளர் செல்வி. ரேணுகா, விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.